தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 25.08.2023

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பெண் தொழில்முனைவோருக்கான வேர் உட்பூசணம் உயிர் உர உற்பத்தி பயிற்சி

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றமும், வேளாண் நுண்ணுயிரியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் இணைந்து பெண் விவசாயிகளுக்கு வேர் உட்பூசணம் உயிர் உர உற்பத்தி மற்றும் பயன்பாடு குறித்து நடத்திய மூன்று நாள் பயிற்சியின் தொடக்க விழா 23.08.2023 அன்று நடைபெற்றது. இதில் தொண்டாமுத்தூர் மற்றும் பெரியநாயக்கன்பாளையம் வட்டத்திற்கு உட்பட்ட 50 க்கும் மேற்பட்ட பெண் விவசாயிகள கலந்து கொண்டனர்.

வேளாண் நுண்ணுயிரியல் துறைத்தலைவர் பேராசிரியர் உ. சிவக்குமார் அவர்கள் சிறப்பு விருந்தினர்களை வரவேற்றார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் வெ. கீதாலெட்சுமி அவர்கள் இந்த மூன்று நாள் பயிற்சியினை துவக்கி வைத்து வேர் உட்பூசண உயிர் உரத்தை உற்பத்தி செய்வதற்கு தேவையான பொருட்கள் அடங்கிய தொகுப்பை, விவசாயிகளுக்கு வழங்கி அவர்களுடன் கலந்துரையாடினார். விவசாயத்தில் மகளிரின் பங்கு குறித்தும், இந்த தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி உயிர் உரத்தை உற்பத்தி செய்தால் விவசாயிகளுக்கு கிடைக்கும் நிகர லாபம் மற்றும் தற்போதைய காலகட்டத்தில் பெண் விவசாயிகள் தொழில முனைவோராக மாற வேண்டிய அவசியத்தையும் குறித்து கலந்துரையாடினார்.

இயற்கை வள மேலாண்மை இயக்கக இயக்குனர் பேராசிரியர். ப.பாலசுப்பிரமணியம் அவர்கள் இயற்கை விவசாயத்தில் நுண்ணுயிரிகளின் பங்கு குறித்தும் அதன் தேவை குறித்தும் எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினராக கோயம்புத்தூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் திருமதி. முத்துலட்சுமி அவர்கள் கலந்து கொண்டு பல்வேறு வேளாண் திட்டங்கள் குறித்து விளக்கினார். இப்பயிற்சியினை ஏற்பாடு செய்த வேளாண் நுண்ணுயிரியல் துறை உதவிப்பேராசிரியர் ரா. பூர்ணியம்மாள் அவர்கள் நன்றியுரையாற்றினார்

இந்த பயிற்சியின் முக்கிய நோக்கம், கிராமப்புற விவசாய மகளிரை தொழில்முனைவோராக மாற்றும் வகையில் எளிதில் பின்பற்றக்கூடிய தொழில்நுட்பங்களை பயிற்சியளித்து செயல்படுத்த வைப்பதேயாகும். இதற்காக தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் நிதியுதவியுடன் மூன்று நாட்கள் வேர் உட்பூசண உயிர் உரத்தை எவ்வாறு தயாரிப்பது என தெளிவான செயல்முறை விளக்கங்களுடன் பயிற்சியளிக்கப்பட்டது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**